# தொகுப்புரை

# தொகுப்புரை

பாரதிதாசன் கதைப்பாடல்களில் எடுத்துரைப்பு முறைகள் எனற் இந்த ஆய்வு முயற்சி எடுத்துரைப்புக் கோட்பாடுகளைத் தனது ஆய்விற்கான அடிப்படையாக அமைத்துக் கொண்டு பாரதிதாசன் கதைப்பாடல்களைக் கீழ்க்கண்ட நான்கு பெரும் தலைப்பில் விரிவாக ஆராய்ந்துள்ளது.

1. தமிழ்க் கவிதையியல் மரபில் எடுத்துரைப்புச் சிந்தனைகள்

2. கதைமாந்தர்களும் பாரதிதாசன் எடுத்துரைப்புத் திறனும்

3. பாரதிதாசன் கதைப்பாடல்களில் கதைப்பின்னல்

4. பாரதிதாசன் கதைப் பாடல்களில் மொழித்திறம்

முதல் இயலில் எடுத்துரைப்பு குறித்த தமிழ்வழிச் சிந்தனைகள் கண்டறியப்பட்டு விளக்கமுற்றன. தொல்காப்பியர் கூறும் கூற்று குறித்த நூற்பாக்கள் இவ்வாய் வேட்டின் மூலம் எடுத்துரைப்புச் சிந்தனைகள் எனப் புதுவிளக்கம் பெற்றன.

இரண்டாவது இயல் மூலமாக பாரதிதாசனின் எடுத்துரைப்புத்திறம் அவரது கதைமாந்தர் உருவாக்கத்தில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பது இவ்வாய்வேட்டின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

மூன்றாவது இயல் மூலமாக எடுத்துரைப்பின் இன்றியமையாத கோட்பாடாக விளங்கும் கதைப்பின்னல் எவ்வாறு பாரதிதாசன் கதைப்பாடல்களில் அமைந்துள்ளது என்பது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு வெளிக்கொணர பட்டுள்ளது.

நான்காவது இயல் மூலமாக ஒரு கவிஞரின் எடுத்துரைப்புத்திறம் அவரது மொழித்திறனைச் சார்ந்தது என்பதனால் பாரதிதாசனின் கதைப்பாடலகளில் அவரது மொழித்திறம் வெளிப்படும் பாங்கு வெளிக்கொணரப் பட்டுள்ளது.

இந்நான்கு தலைப்புகளின் வழி ஆய்வேட்டின் கருதுகோளாக முன் வைக்கப்பட்ட பாரதிதாசன் கதைப்பாடல்கள் எடுத்துரைப்பியல் என்னும் அழகியல் கோட்பாட்டின் அடிப்படையில் எவ்வாறெல்லாம் அமைந்துள்ளன என்பன விளக்கமுற்றன.

மேற்கண்ட ஆய்வு முடிவுகள் முடிந்த முடிவுகள் அல்ல, தொடர்ந்து ஆய்விற்கு உட்படுத்தப்படுபவை என்றே ஆய்வாளர் கருதுகிறார். இது குறித்தத் தொடர் ஆய்வுகள் மேலும் எடுத்துரைப்பு முறையியலைப் பற்றி விரித்துரைக்கலாம். அதற்கான வழிகளை இவ்வாய்வு குறிப்பிட்டுச் செல்கிறது. மேலும் எதிர்காலத்தில் "பாரதிதாசன் கதைப்பாடல்களில் மொழித்திறம்" "காலமும் பாரதிதாசன் எடுத்துரைப்புத் திறனும்" ஆகிய தலைப்புகளில் ஆய்வு செய்ய வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர் கருதுகிறார்.